சுருக்கம்

கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் – மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் வெளியிடப்பட்ட அறிக்கை – கட்டுமானத் தொழிலாளர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் 50 நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்துதல்– அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஜ2) துறை

அரசணை (நிலை) எண்.150

நாள்:08.12.2014
ஜய கார்த்திகை 22,
திருவள்ளுவர் ஆண்டு, 2045
படிக்கப்பட்டது:-

தொழிலாளர் ஆணையர் கடிதம் எண். W1/36148/14, நாள்:22.08.14

ஆணை:-

2014–2015ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரவு செலவு கூட்டத் தொடரில் 12.08.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிக்கையில் இதர அறிவிப்புகளுடன் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> “கட்டுமானப் பணியிடங்களில் சுமை தூக்கிப் பொறி, போக்குவரத்து சாதனங்கள் அல்லது வாகனங்கள் ஆகியவற்றை இயக்குவதில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலை அளிப்போரால் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இதர கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு இவ்வசதி இல்லை. எனவே, பாலங்கள், சாலைகள் மற்றும் கட்டடங்கள் கட்டும் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் ஆய்வக வசதி மற்றும் பல்வேறு பரிசோதனைகளுக்கான வசதிகளுடன் கூடிய 15 நகரும் மருத்துவமனைகள், பிற மாவட்டங்களில் 35 நகரும் மருத்துவமனைகள் என மொத்தம் 50 நகரும் மருத்துவமனைகள் 19 கோடியே 62 லட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு நகரும் மருத்துவமனையிலும் ஓர் ஆண் மருத்துவர், ஒரு பெண் மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர், ஆய்வக நுட்புநர், உதவியாளர் போன்றவர்கள் அடங்கிய ஒரு மருத்துவக் குழு இருக்கும்”.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் கட்டுமானத் தொழிலாளர்களின் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் 50 நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்துதல் தொடர்பான தனது கருத்துருவினை அரசுக்கு அனுப்பியிருந்தார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அவர்கள் பணியிடம் தேடி சுகாதார சேவைகள் வழங்கும் வகையில் 50 நகரும் மருத்துவமனைகள் ஏற்படுத்த அரசு அனுமதி அளித்து ஆணையிடுகிறது. இத்திட்டம், இணைப்பில் கண்டுள்ளவாறு தொடராச் செலவினம் ரூ.9,50,00,000/-லும், தொடரும் செலவினம் ஆண்டொன்றுக்கு ரூ.6,89,80,000/-லும் ஆக மொத்தம் ரூ.16,39,80,000/-ல் (ரூபாய் பதினாறு கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலநிதியியைப் பயன்படுத்தி மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையுடன் இணைந்து கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்படும்:-

(i) ஒரு நடமாடும் மருத்துவமனையில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு ஆய்வக நுட்புநர், ஒரு மருந்தாளுநர், ஒரு ஓட்டுநர், ஒரு உதவியாளர் மற்றும் துப்புரவுப் பணியாளர்கள் அடங்கிய ஒரு மருத்துவ குழு இருக்கும் .

(ii) உரிய வாகனங்களை வாங்குதல், அவைகளை தேவைக்கேற்ப வடிவமைத்தல், தேவையான மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்துதல், உரிய உபகரணங்கள் மற்றும் மருந்துகளை வாங்குதல் போன்ற நடமாடும் மருத்துவமனைக்கு தேவையான அனைத்து பணிகளையும் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை மேற்கொள்ளும். இவ்வாகனங்களில் ஜி.பி.எஸ் (GPS) கருவி பொருத்தப்பட்டு வாகனங்களின் அன்றாட நகர்வு விவரங்கள் கண்காணிக்கப்படும். நடமாடும் மருத்துவ மனைகள் மருத்துவ சேவை செய்ய வேண்டிய கட்டுமான பணியிடங்கள் குறித்த விவரங்கள் மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அவர்களால் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் கீழ் பணிபுரியும் மாவட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு கண்காணிக்கப்படும்.

(iii) 50 நடமாடும் மருத்துவமனைகளில் 15 நடமாடும் மருத்துவமனைகளை பெருமளவில் கட்டுமான பணிகள் நடைபெறும் சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கும், எஞ்சியுள்ள 35 நடமாடும் மருத்துவமனைகளை கட்டுமான பணிகள் நடைபெறும் இடங்களின் தேவைக்கேற்ப பிற மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்படும்.

(iv) இம்மருத்துவமனைகளில் பல்வேறு மருத்துவ பரிசோதனைகளுடன் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், இருதயம் சம்பந்தப்பட்ட நோய்கள், மார்பகம் மற்றும் கர்ப்பப்பை வாயில் ஏற்படும் புற்றுநோய் குறித்த நோய்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். அத்துடன் நோய்களுக்குரிய மருந்துகள், மருத்துவ ஆலோசனை மற்றும் அது தொடர்பான உடல் ஆரோக்கிய கல்வியும் அளிக்கப்படும். குழந்தை பிறப்பிற்கு முன்னரும், பின்னரும் தேவைப்படக்கூடிய குடும்ப நலன், சத்துக் குறைவு மற்றும்

இரத்த சோகை தடுத்தல் ஆகியவற்றிற்கான ஆலோசனைகளும் மேற்கொள்ளப்படும்.

(v) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையால் செயல்படுத்தப்படும் நடமாடும் மருத்துவமனை திட்டத்திற்கான (Hospital on wheels programme) வரையறைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும்.

4. இச்செலவினம் தொடர்பான பட்டியல்களை செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் அவர்களுக்கு அனுப்பி உரிய தொகையினை பெற்றுக் கொள்ளுமாறு இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. இத்திட்டத்தின் செயல்பாட்டு நிலை தொடர்பான மாதாந்திர அறிக்கையை அரசுக்கு அனுப்பும்படி தொழிலாளர் ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மா.வீரசண்முக மணி,
அரசு செயலாளர்

**பெறுநர்**

தொழிலாளர் ஆணையர், சென்னை–600 006.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், சென்னை–600 034.
இயக்குனர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை,
சென்னை– 600 006.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 018.
மாநிலக் கணக்காயர், சென்னை–600 009.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–600 009.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின்முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
நிதித்துறை முதன்மைச் செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

இரா. கஸ்தூரி 8/12/14
பிரிவு அலுவலர்.

08.12.14

# இணைப்பு

அரசாணை (நிலை) எண். 150, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஜ2) துறை, நாள்:08.12.2014

| வ.எண் | விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| I. | **தொடராச் செலவினம் (ஒரு வாகனத்திற்கு)** | |
| 1. | 30 இருக்கை கொண்ட வாகனத்தை மாற்றி அமைத்தல் | 17,00,000 |
| 2. | ஆய்வக சாதனங்கள் ( ECG, Semi- auto Analyser, Microscope and other equipments) | 2,00,000 |
| | **மொத்த தொடராச் செலவினம்** | **19,00,000** |
| II. | **தொடரும் செலவினம் – ஒரு வாகனத்திற்கு / ஒரு ஆண்டிற்கு** | |
| A. | **பணியாளர்களின் ஊதியம் (தொகுப்பூதியத்தில்)** | |
| 1. | மருத்துவ அலுவலர்–1 – மாத ஊதியம் ரூ.40,000/– | 4,80,000 |
| 2. | செவிலியர்–1 – மாத ஊதியம் ரூ.8,800/– | 1, 05,600 |
| 3. | ஆய்வக நுட்புநர்–1 மாத ஊதியம் ரூ.7000/– | 84,000 |
| 4. | மருந்தாளுநர்–1– மாத ஊதியம் ரூ.12,000/– | 1,44,000 |
| 5. | ஓட்டுநர்–1 – மாத ஊதியம் ரூ.6,000/– | 72,000 |
| 6. | உதவியாளர் மற்றும் துப்புவாளர்–1 மாத ஊதியம் ரூ.4,500/– | 54,000 |
| | மொத்தம் | 9,39,600 |

| | | |
|---|---|---|
| B. | மருந்துகள் மற்றும் இதர செலவினம் | |
| 1. | ஒரு வருடத்திற்கான மருந்து செலவு | 2,00,000 |
| 2. | ஒரு வருடத்திற்கான ஆய்வுக்கான காரணிகள் | 50,000 |
| | மொத்தம் | 2,50,000 |
| C. | வாகனம் | |
| 1. | எரிபொருள் செலவு பிரதிமாதத்திற்கு ரூ.15,000/– என்ற வகையில் | 1,80,000 |
| 2. | வாகன பராமரிப்பு செலவுகள் ஆண்டொன்றிற்கு ரூ.10,000/– என்ற வகையில் | 10,000 |
| | மொத்தம் | 1,90,000 |
| | **மொத்த தொடரும் செலவினம்** | **13,79,600** |

<u>மொத்த செலவினம் –50 நடமாடும் மருத்துவமனைகள்</u>

1. தொடராச் செலவினம் (50Xரூ.19,00,000) = ரூ. 9,50,00,000/–

2. தொடரும் செலவினம் (50Xரூ.13,79,600) = ரூ. 6,89,80,000/–

--------------

**மொத்தம் = ரூ. 16,39,80,000/–**

--------------

மா.வீரசண்முக மணி,
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

இரா. கல் ... 8/12/14
பிரிவு அலுவலா.
08-12-14